Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -09 26-10-2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 250

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

Jaffna Road,
Kilinochchi.

யாழ் சாலை,
(சி-8628) கிளிநொச்சி.

# வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பது குறித்து

# சனாதிபதி-ஜே.வி.பி. யினர் இரகசியப் பேச்சு

## தேர்தல் கூட்டுக் குறித்தும் ஆராய்வு

**ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அடுத்தமாதம் சமர்ப்பிக்கவுள்ளவரவு- செலவுத்திட்டத்தைத் தோற்கடிப்பது குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றிரவு ஜே.வி.பி. யினரைச் சந்தித்து இரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தேர்தல் கூட்டுப்பற்றியும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது. இச்சந்திப்பு இரவு 8மணிக்கு ஆரம்பமாகி 10.45 மணியளவில் முடிவடைந்துள்ளது.**

இதில் பலதரப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிட இரு கட்சிகளினதும் கூட்டமைப்பை ஏற்படுத்த முடியுமா?, அதேபோன்று அரசு முன்னெடுக்கின்ற சமாதான முயற்சி நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்கு வாய்ப்பாக இல்லை. எனவே அரசை தோல்வியடையச் செய்ய ஒரேவழி அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத்திட்டத்திற்கு வாக்கெடுப்பினை மேற்கொண்டு அதனைத் தோற்கடிப்பதென முடிவுசெய்துள்ளனர். இதற்கு ஐ.தே.கட்சியில் ஒரு பிரிவினர் தங்களுடன் ஒத்துழைப்பார்கள் என சனாதிபதிகூறியுள்ளார்.

அத்துடன் இன்றைய பேச்சுக்களின் போது ஆராயப்பட்ட விடயங்களை விரிவாக ஆராய ஒரு திகதியை நிர்ணயித்து மீண்டும் சந்திப்பதென இதன்போது தீர்மானிக்கப்பட்டது.இச்சந்திப்பில் ஜே.வி.பி. தரப்பில் விமல் வீரவன்ச, அனுர திஸநாயக்க, டில்வின் சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

-கிண்ணியாவில் அமைதியை ஏற்படுத்த-

## கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் முஸ்லிம்கள் - பொலிசார் சந்திப்பு

கிண்ணியாவில் அமைதியையும், சமாதானத்தையும் உருவாக்கும் நோக்குடன் நேற்று மாவட்டபோர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பணிமனையில் மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் , முஸ்லிம் பிரமுகர்களுக்குமிடையே சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இதேவேளை, கிண்ணியா பொலிஸ்பிரிவில் நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை நீக்கப்பட் டுள்ளது.

வியாழக்கிழமை இடம்பெற்ற ஹர்த்தாலினைத் தொடர்ந்து நடைபெற்ற அசம்பாவிதங்களின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாலம் திருத்தம் முடிவடைந்தது

பரந்தன்முல்லைவீதியில் அமைந்திருந்த கண்டாவளை வெலிக்கண்டல் பாலதிருத்தப் பணிகள் நேற்றுடன் முடிவடைந்துள்ளதால் இன்று முதல் அப்பாதையூடாக

(8 ஆம் பக்கம் பார்க்க)

-ரெலவ்சனை பதவி நீக்கும் விவகாரம்-

## நோர்வேப் பிரதமருடன் சிறில. அரசு கலந்துரையாடும்

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரெலவ்சனை பதவியிலிருந்து நீக்குவது தொடர்பான விவகாரம் குறித்து நோர்வேப் பிரதமருடன் சிறிலங்கா அரசு கலந்துரையாடவுள்ளதாகத் தெரிய வருகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரைப் பதவியிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு சனாதிபதி நோர்வேப் பிரதமரிடம் கூறியமை குறிப்பிடத்தக்கது. இதனிடையே அவரைப் பதவியிலிருந்து அகற்ற உடனடியாக நடவடிக்கை எதனையும் மேற்கொள்ள வேண்டாமென நோர்வேப் பிரதமரிடம் சிறிலங்கா அரசு கேட்கவுள்ளதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ரெலவ்சனை நீக்க சனாதிபதி கோருவது சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தல்

### ஐ.தே.மு. அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரை பதவியில் இருந்து நீக்கி விடுமாறு சனாதிபதி விடுத்துள்ள கோரிக்கை சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா கடற்படை படகுகளில் கடமையாற்றுவதில் இருந்து விலகிக்கொள்வது குறித்து நோர்வே கண்காணிப்பாளர் முயற்சி செய்து வருவதாக தகவல் கிடைத்துள்ளதாக அரசாங்க ஊடகப் பிரிவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் கடற்பிரதேசத்தில் கடமையாற்றுவது குறித்து தெளிவற்ற நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் கடிதம் குறித்து கருத்துக்களை க.கா.குழு மறுப்பு

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லையென இக்குழு அறிவித்துள்ளது. இக்குழுவின் பேச்சாளர் இலங்கை வானொலிக்கு கருத்துத் தெரிவிக்கையில் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை கண்காணிப்பாளர்கள் எவ்வித இடையூறும் இன்றி மேற்கொள்வார்களென தெரிவித்துள்ளார். கண்காணிப்புக்குழு தொடர்பாக சமீபத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கண்காணிப்பாளர்களின் நடவடிக்கைகளில் பாரிய தாக்கங்கள் ஏற்படுத்தக்கூடுமென கருத்துக்கள் வெளியிடப்பட்டன எனவும் அவர் கூறியுள்ளார்.

சனாதிபதியின் கடிதம் தொடர்பாகக் கருத்து வெளியிட மறுத்த அவர் சம்பந்தப்பட்ட தரப்பினரால் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக்கூறியுள்ளார்.

## புலிகள் பேச்சிற்கு அழைத்ததன் மூலம் ம.ம.மு. யின் கோரிக்கை நிறைவேறியது

### ம. ம. மு. தலைவர் சந்திரசேகரன்

(அலுவலக செய்தியாளர்)

இனப்பிரச்சினை தீர்வில் மலையக மக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு கோரிக்கை நிறைவேறி இருக்கிறது. தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக திட்டம் பற்றிய ஆலோசனை சம்பந்தமாக கலந்துரையாட மலையகத் தலைவர்களையும் அழைத்து இருப்பது மலையக மக்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது என்று நேற்று வன்னி புறப்படுமுன்னர் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரன் தெரிவித்தார்.

இன்று விடுதலைப் புலிகளின் ஆலோசனை சம்பந்தமான தமது திட்ட வரைவு குறித்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மீனவர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து பருத்தித்துறையில் மீனவர்கள் போராட்டம்

கடந்த செவ்வாய்க்கிழமை யிரவு பருத்தித்துறை முனைப் பகுதியில் மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் படையினரால் தாக்கப்பட்டமை மற்றும் மீன் பிடிப்படகுகள் சேதமாக்கப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் மற்றும் மறியல் போராட்டங்களை வடமராட்சி மீனவசங்கங்கள் நேற்று மேற்கொண்டிருந்தன. காலை 9.00 மணியளவில் முனை, புனித தொம்மையப்பர் தேவாலயத்தில் இருந்து ஆர்ப்பாட்டப்பேரணி புறப்பட்டது. கடற்கரை வீதி, 3ஆம் குறுக்குத்தெரு,தும்பளை வீதியூடாக யாழ்-பருத்தித்துறை வீதியை வந்தடைந்த பேரணி பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக முடிவுற்றது.

நூற்றுக்கணக்கான மீனவர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். பேரணியில் கலந்துகொண்டவர்களுக்கு ஆயுதங்கள் எதுவுமின்றி பொலிசார் பாதுகாப்பு வழங்கியிருந்தனர். பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் மாவை சேனாதிராசா, வெகுசன

(8 ஆம் பக்கம் பார்க்க)



## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

முருகேசு பரமானந்தம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (621921274V) சாரதி அனுமதிப்பத்திரமும் வட்டக்கச்சி சுகுனா கடை சந்திக்கும் ஆறுமுகம் வீதிக்கும் இடையில் 25.10.03 அன்று காலையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் அல்லது வே.சிவநேசன் 134 ஆறுமுகம் வீதி வட்டக்கச்சியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (3119)


## ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் வெடிபொருள் அகற்றும் பணி

ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் வெடிபொருட்களை அகற்றும் பணியினைஇராணுவவெடிபொருள் அகற்றும் நிபுணர்குழு ஆரம்பித்துள்ளது.

ஓமந்தைப் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையிலான 100 மீற்றர் நீளமான பிரதேசமே சூனியப் பிரதேசமாகும். இதில் இராணுவத்திற்கு சொந்தமான 50மீற்றர் பிரதேசத்தில் உள்ள வெடி பொருட்களையே இராணுவ வெடிபொருள அகற்றும் நிபுணர்குழு ஆரம்பித்துள்ளது. (10)

# முஸ்லிம் காங். - இந்தியத் தூதுவர் சந்திப்பு

# புதிய ஒப்பந்தம் குறித்து மு.கா. திருப்தி

அமைச்சர் ரவூப்ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரசின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் மாலை இந்திய உயர்ஸ்தானிகர் நிருபம் சென்னைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு சகல இனத்தவர்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டுமெனவும், இருநாடுகளுக்குமிடையே காணப்பட்ட இணக்கப்பாடு திருப்தியளிப்பதாக உள்ளதாக ஹக்கீம் இந்திய உயர்ஸ்தானிகரிடம் கூறியுள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங் கேற்பதை வரவேற்ற இந்திய உயர்ஸ்தானிகர் முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ளும் பிரித்தானிய விஜயம் குறித்து விரிவாக கேட்டறிந்துள்ளதாக கூறப்படுகிறது. இதனிடையே முஸ்லிம் காங்கிரசின் தூதுக்குழுவினர் பிரித்தானியாவிற்கு சென்று திடும்பிய பின்னர் மீண்டும் இந்திய உயர்ஸ்தானிகளுடனான சந்திப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

## -கிளி. மாவட்ட வைத்தியசாலையில்-

# பாம்புக்கடிக்கு இலக்காகிய 20 பேருக்கு ஒருவாரத்தில் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக்கடிக்குள்ளானோர் தொகை அதிகரித்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த வாரத்தில் மட்டும் 20க்கும் மேற்பட்டோர் பாம்புக்கடிக்குள்ளாகி கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதுடன் சிலர் மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ்.வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனரென வைத்திய கலாநிதி பா.யூடிரமேஸ் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று நண்பகல் உதயநகர் மேற்கு பகுதியில் வீட்டினுள் இருந்த புத்தகப்பெட்டியை திறந்தபோது அதற்குள் இருந்த நாகபாம்பு சீறியது. இதன் போது பெட்டியைத்திறந்த சிறுவன் சாதுரியமாக பாம்பு தீண்டாது தப்பித்துக்கொண்டான்.

அடுத்து சிறுவனால் மேற்படி நாகபாம்பு அடித்து கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி. மாவட்ட வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளி மாவட்ட வைத்தியசாலையில்(பழைய மாவட்ட வைத்தியசாலை அமைவிடத்தில்) புதிதாக அமைக்கப்பெற்ற மகப்பேற்று விடுதி திறந்து வைக்கப்படவுள்ளது. நாளை காலை 9.00 மணிக்கு புதிதாக கட்டப்பட்ட மேற்படி மகப்பேற்று விடுதி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளதென கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ச.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


இதுவரைகாலமும் மகப்பேற்று விடுதி கிளிநொச்சி1ஆம் கட்ட வைத் தியசாலையில் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த சனாதிபதி சந்திரிகா முடிவெடுத்துள்ளார்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தன்னிடமுள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த முடிவு செய்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் சேனை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். சிறிலங்காவின் ஆட்சியை மாற்றியமைக்கும் சனாதிபதியின் அறிவிப்பு எந்நேரத்திலும் வெளியிடப்படலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார். சிறிலங்காவின் இறைமைக்கும், பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். அத்துடன் மேற்குலக ஏகாதிபத்தியவாதிகளின் எதிர்ப்புக்களை நிறைவேற்றுவதில் ஐ.தே.அரசு கண்ணும் கருத்துமாக இருப்பதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். இந்நேரத்தில் அரசியல் கருத்து முரண்பாடுகளை மறந்து அனைத்துச் சக்திகளும் ஒன்று சேர்ந்து அரசாங்கத்தை வீழ்த்தும் போராட்டத்தின் ஆரம்ப நடவடிக்கையாக இந்த மக்கள் சேனை ஆர்ப்பாட்டப் பேரணி அமைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.



அதேவேளை ஐ.தே.அரசை பதவி நீக்கிவிட்டு தனது தலைமையிலான புதியதோர் அரசை உருவாக்கத் தயாராகவுள்ளதாக இப் பேரணிக்கு சனாதிபதி அனுப்பியிருந்த வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றிபெறுவதை எவரும் தடுக்கமுடியாது

## சிறில. பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியாவதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார். இம்முறை நடக்க இருக்கும் சனாதிபதித் தேர்தல் ஒரு மனிதன் சாகசநிகழ்வாக அமையும் என மாரப்பன வர்ணித்துள்ளார். சனாதிபதித் தேர்தலின் பின் பாராளுமன்ற அதிகாரமும் நிறைவேற்று அதிகாரமும் எமது வசமாகிவிடும். தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்த்து எதிர்க்கட்சியினரால் புதிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த முடியாது. அன்று நாடு இருந்த நிலையை அநேகர் மறந்து விட்டனர். அன்று சமாதானம் பொருளாதாரம், கலாச்சாரம், போன்றவை சீரழிந்த நிலையில் இருந்தன. இன்று அந்த நிலை முற்றாகமாறியுள்ளது. இன்று நாட்டின் கிரகநிலை மாறியுள்ளது. இன்று நாட்டில் சகலரின் கிரகநிலையும் மாறி நல்லகாலம் ஆரம்பமாகியுள்ளது.

இன்று அரசை வீழ்த்துவதற்கு பாதயாத்திரைகள், வேலை நிறுத்தங்கள் நாடுமுழுவதிலும் நடத்துவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானம் எடுத்துள்ளன. இந்த எதிர்ப்புக்களினால் அரசாங்கம் பலம்பெற்று வருகின்றது. எனவே இந்த அரசாங்கத்தை வீழ்த்த அவர்களால் முடியாது.

இருபது வருடங்கள் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தைநிறுத்தித் தற்பொழுது விடுதலைப்புலிகள் அமைப்பும் அரசாங்கமும் சமாதானம் செய்துகொண்டுள்ளன. நாட்டில் ஒவ்வொருவரும் நாட்டின் நலன் கருதி சமாதானத்தை நிலைநிறுத்தப்பாடுபடவேண்டும். விடுதலைப் புலிகளை எங்களால் பகைத்துக் கொள்ள முடியாது. அவர்களின் நட்பையே விரும்புகின்றோம். அரசாங்கம் பொறுமையோடும், அமைதியுடனும் செயற்படும்பொழுது எதிர்க்கட்சியினர் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கப்பல் மூலம் கடத்திக்கொண்டு வருகின்றார்கள் என்றும் திருகோணமலையைச் சுற்றி முகாம்கள் அமைத்துள்ளார்கள் என்றும் பொய்ப்பிரச்சாரங்கள் செய்து வருகின்றனர். இவர்களின் பிரச்சாரங்களைநம்பி ஏமாறவேண்டாம் எனநான் சகல மக்களையும் கேட்டுக்கொள்கிறேன். என திலக்மாரப்பன கூறியுள்ளார்.

# இராணுவத்திலிருந்து விலகுவதற்கான கால எல்லை முடிவடைந்தது

(கொழும்பு)

ஹம்பகா மாவட்டத்தில் இராணுவத்திலிருந்து அனுமதி பெறாது விலகிக் கொண்ட இராணுவத்தினர் சட்டபூர்வமாக பதவியில் இருந்து இராஜினாமாச் செய்வதற்கான கால எல்லைநேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

இந்த மாதம் 20ஆம் திகதி தொடக்கம் இவர்கள் சட்டபூர்வமாக பதவியில் இருந் இராஜினாமாச் செய்யலாம் என்று இராணுவ தலைமைக்காரியாலயம் அறிவித்திருந்தது.

தற்போது சட்டபூர்வமாக பதவியில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தவர்கள் மீண்டும் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்காப் பிரதமர் ரணில் நவ-4இல் புஷ்சை சந்திப்பார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாதம் அமெரிக்காவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா செல்லும் அவர் எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்சை வெள்ளைமாளிகையில் சந்திக்கவுள்ளார். இந்த சநதிப்பின் போது இலங்கையின் சமாதான நடவடிக்கை, இருதரப்பு உறவுகள், பிராந்திய மற்றும் சர்வதேச விடயங்கள் தொடர்பாகவும் இரு தலைவர்களும் விரிவாக ஆராய்வார்கள் என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# நீதிமன்ற அனுமதியின்றி வீட்டை சோதனையிட்டது மனித உரிமை மீறல்

## பொலிசார் மீது மாகாணசபை உறுப்பினர் வழக்கு

நீதிமன்றத்தின் எவ்வித அனுமதியும் பெறாத நிலையில் பொலிஸ் குழுவினர் சிலர் தமது வீட்டை 3 மணிநேரம் சோதனையிட்டதாகவும், தமக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியதாகவும் தமது அடிப்படை மீறுவதாகவும் கூறி தென்பகுதி மாகாண சபை உறுப்பினர் ஒருவர் பொலிசாருக்குஎதிராக உயர் நீதிமன்றத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு இப்புகார் பற்றி ஆராய்ந்து வருகிறது. தென்பகுதி ஹடங்கம, அங்குனு கொள பெலஸ்ஸ, மித்தெனிய, வீரகெட்டிய ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட மேலும் பல பொலிஸ் அதிகாரிகள் குற்றவாளிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேற்படி பொ.ஐ.மு. சபை உறுப்பினர் தமது மனுவில் குறிப்பிடப்படுவதானது கடந்த ஏழாம் திகதி தானும் தனது மனைவியும் வீட்டில் இருந்தவேளை தமது ஆதர வாளர்களின் குறைகளைக் கேட்டுக் கொண்டிருந்ததாகவும் மேற் படி பொலிசார் தமது வீட்டைச் சோதனையிட்டதாகவும் சோதனைக்கான காரணமோ அதற்கான நீதிமன்ற உத்தரவோஅவர்கள் காட்டவில்லை எனவும் கூறியதுடன் இது ஒரு மனித உரிமை மீறல் செயல் எனவும் குறிப்பிட்டு இதற்காக தமக்கு 10 இலட்சம் ரூபா நட்டஈடாகப் பெற்றுத் தருமாறு நீதிமன்றில் முறையிட்டுள்ளார்.

# அரசாங்க ஊழியர்களின் சம்பளம் எமது ஆட்சியில் அதிகரிக்கப்படும்

## -சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

அடுத்து வரும் பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் சகல அரச ஊழியர்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்படுவதுடன் சகல பட்டதாரிகள் உட்பட ஐம்பதாயிரம் பேருக்கு தொழில் வழங்கப்படும் என சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஏற்பாட்டில் கொழும்பு நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாட்டை பாதுகாக்கும் மக்கள் சேனை பேரணிக்கு அனுப்பிவைத்த செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.தே. கட்சி ஆட்சியில் நாடு பிளவுபடும் அபாயம் தோன்றியுள்ளதாக குறிப்பிட்ட சனாதிபதி கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளின் அச்சுறுத் தலுக்கு முஸ்லிம்கள் முகம்கொடுத்து வருவதாகவும் கூறியுள்ளார்.


## வீதி அபிவிருத்தி அதிகார சபை

## முக்கிய அறிவித்தல்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் எழுதுவினைஞர், இலகு பிரயாணிகள் வாகன சாரதி அலுவலக உதவியாளர் ஆகிய வெற்றிடங்கள் தொடர்பான இரண்டாவது நேர்முகப் பரீட்சை

**எதிர்வரும் 28.10.2003 அன்று நடைபெற இருந்த மேற்படி பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இப் பரீட்சை நடைபெறுகின்ற திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதனைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.**

எந்திரி வே.தர்மகுலசிங்கம்
மாகாணப் பணிப்பாளர் வ-கி [வ]
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
யாழ்ப்பாணம்.

வே.மோகன்,
பிரதானபொறியியலாளர்,
அபிவிருத்தி அதிகாரசபை,
முல்லைத்தீவு.

(சி-8676)

# இந்தியா - பாகிஸ்தானில் 83 அணுவாயுதங்கள்; விமானங்களைப் பாவித்தே தாக்கத்திட்டம்!

## - அமெரிக்க பிரதிநிதிகள் சபை அறிக்கை

(வாஷிங்டன்)

**இந்தியா, பாகிஸ்தான் நாடுகளில் உள்ள அணுவாயுதங்களை சரியாகக் கணிப்பிட முடியாது இருக்கிறது. எனினும் இவற்றிடம் 83 வரையான அணுவாயுதங்கள் இருக்கலாம் என அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை அறிவித்துள்ளது.**

இந்தியாவிடம் 30 முதல் 35 வரையான அணுவாயுதங்கள் இருக்கலாம் என அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் உள்ள அணுவாயுதங்களின் எண்ணிக்கை குறித்தும் அவைகளின் திறன் குறித்தும் உளவு அமைப்புக்களினால் திரட்டப்பட்ட தகவல்களினை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க பிரதிநிதிகள் சபை இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.

பாகிஸ்தானிடம் 24 முதல் 48 வரையான அணுவாயுதங்கள் உள்ளதாக குறிப்பிட்ட இந்த அறிக்கை இவ்விரு நாடுகளிடமும் உள்ள அணுவாயுதங்களை சரியாகக் கணிப்பிட முடியவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இரு நாடுகளும் தம்மிடம் உள்ள அணுவாயுதங்களை போர் விமானங்களை கொண்டு பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகக் கூறும் இவ்வறிக்கை மிக்-27, சேகுவார் மற்றும் சுக்காய்-30, எம்.கே.ஐ. போன்ற விமானங்களையே இந்தியா பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அவ்வறிக்கை தெரிவித்துள்ளது.

இதேபோன்று எவ்-16, எவ்-16பி போன்ற விமானங்களைப் பயன்படுத்தி பாகிஸ்தான் தனது அணுவாயுதங்களைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் இந்த அறிக்கை மேலும் கூறியுள்ளது.

## வெளியேறப் பணிப்பு!

சவூதி அரேபியாவில் வாழும் பிரிட்டன் பிரஜைகளை இயன்றளவு விரைவில் அங்கிருந்து வெளியேறுமாறு பிரிட்டன் ஆலோசனை தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்கள் சவூதி அரேபியாவில் எந்த நேரத்திலும் இடம்பெறலாம் என பிரிட்டன் அறிவித்துள்ளது.



ஈராக்கில் குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த அமெரிக்க இராணுவ வாகனமொன்றை தீயிட்டுக் கொழுத்தி மகிழும் ஈராக்கியர்கள்.

# ஈராக் புனரமைப்பிற்கு 3300 கோடி டொலர் உத்தேச மதிப்பீட்டில் 2300 கோடி இழப்பு

மட்ரீட்டில் நேற்று முன்தினம் நிறைவடைந்த ஈராக்கின் புனரமைப்பிற்கு நிதி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் உலக நாடுகள் 3300 கோடி டொலர்களை உதவியாக வழங்க உத்தரவாதம் அளித்துள்ளன.

அமெரிக்க நிதி அமைச்சர் கருத்து தெரிவிக்கும் போது, மாநாட்டின் அடிப்படையில் 5600 கோடி டொலர்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் வாக்குறுதியளிக்கப்பட்ட இந்த தொகையையிட்டு திருப்தி அடைந்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா 2000 கோடி டொலர்களை வழங்கும் சிறிலங்கா அதன் தேயிலையை ஈராக்கிற்கு கப்பல் மூலம் அனுப்பிவைக்கவுள்ளது.

# அமெரிக்க கவச வாகனத்தில் நசியுண்டு ஈராக்கிய குடும்பம் பலி!

ஈராக்கில் அமெரிக்க ரோந்து படை ஒன்றுக்கு இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் இருந்து தப்பிக்கொண்ட ஈராக்கிய குடும்பம் ஒன்று அமெரிக்க கவச வாகனமொன்றில் அகப்பட்டு உயிரிழந்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கவச வாகனம் ஏறியதில் ஐந்து வயதான சிறுமியும், அவரது 59 வயதான தந்தையும், தாயும் உயிரிழந்துள்ளனர்.

# பாதுகாப்பு வேலி அமைத்தல் தடையின்றி தொடர்கிறது!

## -இஸ்ரேல் பிரதமர் அறிவிப்பு


மேற்குக் கரையின் கிழக்கு பகுதிவரை பாதுகாப்பு வேலி விஸ்தரிப்பிற்கான திட்டம் ஒன்றை இஸ்ரேல் தயாரித்துள்ளது.

இந்த வேலி அமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்ததும் பலஸ்தீன மக்கள் முழுமையாக சுற்றிவளைக்கப்பட்டு விடுவார்கள் என்று இஸ்ரேலின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வேலி அமைக்கப்படுவது குறித்து இஸ்ரேலியப் பிரதமரிடம் தொலைக்காட்சி பேட்டி ஒன்றின்போது செய்தியாளர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் பாதுகாப்பு வேலி அமைக்கப்படுவதை அவர் ஊர்ஜிதம் செய்தார்.



பலஸ்தீன மேற்குக்கரை முஷா கிராமத்திற்கு அண்மையில் இஸ்ரேலியப் படையினரால் புதிதாக அமைக்கப்பட்ட எல்லைச் சுவருக்கருகில் நடந்து செல்லும் பலஸ்தீனப் பெண்கள்.



அமெரிக்க கடற்படையின் தேடுதல் நடவடிக்கையில் பயன்படுத்தப்படும் U.S.S டொல்பின் நீர்மூழ்கி.

## டெங்கு நோயால் பாதிப்பு!

(புதுடில்லி)

இந்தியாவில் டெங்கு காய்ச்சலை எதிர் கொண்டுள்ள 10 மாநிலங்களின் பட்டியலை மத்தியரசு வெளியிட்டுள்ளது.

கேரளாவில் டெங்கினால் 3263 பேர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு 64 பேர் மரணமாகியுள்ளார்கள்.

கர்நாடகாவில் 98 பேர் பாதிக்கப்பட்டு, 07 பேர் இறந்துள்ளார்கள்.

டில்லியில் 1537 பேர் பாதிக்கப்பட்டு 15 பேர் இறந்து விட்டார்கள். 10 மாநிலங்களில் டெங்கு பரவியுள்ள போதும் இந்த 03 மாநிலங்களுமே மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சுக் கூறியுள்ளது.

# கறுப்பின மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க பிரிட்டன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## -தென்னாபிரிக்க அரசு வேண்டுகை

அடிமைப்படுத்தப்பட்ட கறுப்பின மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பிரிட்டன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தென்னாபிரிக்க அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பின சனாதிபதியான நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்பட்டு சுமார் பத்து வருடங்களின் பின்னர் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. லண்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமான கூட்டத்தின் போது இந்த வேண்டுகோளை தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் விடுத்துள்ளார். அத்துடன் தென்னாபிரிக்காவை முன்னர் ஆட்சி செய்த வெள்ளையர்களுக்கு நன்றி தெரிவித்த அவர் தமது நாடு தற்போது முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு பிரிட்டன் உதவ வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். கறுப்பினத்தவர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்பதை சீர்தூக்கிப் பார்த்து எதிர்காலத்தில் முகம் கொடுக்கவுள்ள சவால்களை எவ்வாறு தீர்க்கலாம் என்பது குறித்து ஆலோசிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


# கடமையின் போது உயிர்நீத்த ஐ.நா.ஊழியர்களுக்கு நினைவுத்தூபி

(நியுயோர்க்)

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 1945 ஆம் ஆண்டு ஆரம்பமானதில் இருந்து கடமையின் போது உயிரிழந்த 2000 சிவில் மற்றும் அமைதி காக்கும் படையினருக்காக நேற்று முன்தினம் நியூயோர்க்கிலும் ஜெனீவாவிலும் நினைவுத் தூபிகள் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன.

செயலாளர் நாயகம் கொபி அனான் ஐக்கிய நாடுகள் தலைமைக் காரியாலயத்தில் இதற்கென நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய போது நாங்கள் பணியாற்றும் சூழலில் ஆபத்துக்கள் அதிகரித்து வருகின்றன என்றும் இந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உத்தியோகத்தர்கள் களத்தில் செயலாற்றும் போது அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு தலையானது என்றும் கூறினார்.

இத்தகைய தியாகிகளை நினைவு கூர்ந்து அவர்களின் பணிகளை நாங்கள் தொடர்வதாக இந்த சந்தர்ப்பத்தில் திடசங்கற்பம் பூணுவது பொருத்தமானது என்றும் கொபி அனான் மேலும் தெரிவித்தார்.



தலைசிறந்த கொன்கோர்ட் சுப்பசொனிக் ரக விமானங்களில் ஒன்று லண்டனில் விமானப்படைத்தளம் ஒன்றிலிருந்து எழும்பிச் செல்கின்றது. இது பிரிட்டன் விமானப்படையின் 30 வருட பாவனையின் பின் நிறுத்தப்படுகிறது.

# சத்திர சிகிச்சையால் பிரிந்த குழந்தைகள் முதல் தடவையாக ஒன்றையொன்று பார்த்தன

தலைகள் ஒட்டிப் பிறந்த எகிப்திய குழந்தைகளைப் பிரித்தெடுக்க சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு இரண்டு வாரம் கழிந்த பின்னர் இரு குழந்தைகளும் முதல் தடவையாக ஒன்றை ஒன்று பார்த்துள்ளன.

இரண்டு வயது நிரம்பிய முகமட் மற்றும் அகமட் ஆகிய இரு குழந்தைகளும் ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் டலாஸ் நகரில் உள்ள சிறுவர் வைத்தியசாலையில் இந்த சத்திரசிகிச்சை நடைபெற்றது தெரிந்ததே. குழந்தைகளைச் சந்திக்க வைத்த சமயம் பெற்றோரும் சத்திரசிகிச்சை செய்த வைத்தியர்களும் உடனிருந்தனர்.

வைத்தியர்கள் கருத்து வெளியிடுகையில் சத்திர சிகிச்சை காரணமாக குழந்தைகளின் மூளைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை அறிவதற்கு இரண்டு வாரங்கள் செல்லும் எனத் தெரிவித்துள்ளனர்.

# “ஈரான் அணுவாயுதப்பரிசோதனை இணக்கப்பாடு...” நன்மையாகுமா...?



ஈரான் அணுவாயுத சர்ச்சையினால் அதிக சிக்கல்களுக்கு முகம் கொடுத்ததையிட்டு, தனது அணுவாயுத திட்டங்கள் உள்ள பகுதிகளைச் சோதனை செய்வதற்கும், யுரேனியம் உற்பத்திகளைக் கைவிடுவதற்கும் திடீரென இணக்கம் காட்டியுள்ளது.

ஈரானின் இந்த இணக்கம் தான் உலக அரசியலில் இன்று பரபரப்பாகப் பேசப்படுகின்றது. அதேவேளை இந்த இணக்கமே ஈரானை அமெரிக்காவின் வல்லூறுத் தனத்திற்கு இரையாக்கிவிடுமோ.... எனும் அச்சத்தையும் தோற்றுவித்துவிட்டதெனலாம்.

ஈராக்கையடுத்து அமெரிக்காவின் பார்வை ஈரான், வடகொரியா மீது திரும்பியிருந்த போதும் வடகொரியா தனது எந்த நடவடிக்கைகளையும் தனது நாட்டிற்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கும் பட்சத்தில்தான் கைவிடுவதாக எச்சரிக்கை செய்தது. அத்துடன் அணுவாயுதப் பரம்பல் தடைச்சட்டத்திலிருந்தும் விலகி அந்த எச்சரிக்கைக்கு மேலும் வலுச் சேர்த்துக் கொண்டது.

ஆனால் இதுவரை காலமும் அமெரிக்காவின் மிரட்டலுக்கு ஈரான் மசியவில்லை. தன்னிடம் இருப்பது எல்லாம் மக்களின் தேவைக்கான யுரேனிய பயன்பாடே... நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைய இந்த யுரேனிய செறிவூட்டல் அவசியமானது என்றுதான் எதிர்வாதம் புரிந்தது.

இதனால் அந்நாட்டினுள் வேற்றுமைகளை உருவாக்குவதன் மூலம் அந்நாட்டினுள் தனது காலை பதித்திடத்தான் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் மிகுந்த பிரயாசைப்பட்டார்.

அதனால் தான் ஈரான் மக்கள் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் சனாதிபதி கதாமியின் நடவடிக்கைகள், கட்டுப்பாடுகள் என்பவற்றினால் இறைமையை இழந்துள்ளார்கள். அவர்களிற்கு உதவுவது கட்டாயமானது என்று ஜோர்ஜ் புஷ் ஈரானில் சாதாரண போராட்டங்கள், சம்பவங்களையெல்லாம் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு விடலாம் என்றே கனவு கண்டார்.

ஆதலால் தான் புஷ் சிறிய விடயங்களையும் பூதக் கண்ணாடி மூலம் தான் பெரிதாக்கிப் பார்த்தார். ஏனைய நாடுகளையும் அவ்வாறு பார்க்குமாறும் கட்டாயப்படுத்தினார். ஈரானின் இறைமையைப் பேணுதல் என்பது அங்கு சீர்திருத்தங்களைச் கொண்டு வருவதன் மூலமே ஏற்படுத்தப்பட முடியும் என்று தனது இலக்கிற்கு சமாதானமும் கூறிக் கொண்டார்.

உண்மையில் ஈரானில் சீர்திருத்தம் என்பது ஜோர்ஜ் புஷ் கூறுவது போல அமைந்து விடுவதில்லை. பற்றுள்ள பழமைவாதிகள் தான் அங்கு ஊறித்திளைத்துக் காணப்படுகின்றார்கள்.

பழமைவாதிகளும், மதப்பிரமுகர்களும் ஒன்றிணைந்து தான் 1979 இல் மன்னர் ஷாமொஹமட்டை பதவி கவிழ்த்தார்கள். பிரதமரை நாட்டைவிட்டே வேற்று நாட்டிற்கு ஓடவும் செய்தார்கள்.

அன்று மன்னரின் மதப்பற்றற்ற போக்கும், அமெரிக்காவின் கொள்கைகளை நிலைநாட்ட முனைந்தமையுமே மன்னராட்சி கவிழக் காரணங்கள் என இன்றுவரை கூறப்படுகின்றது.

அதேநேரம் ஈரானில் இன்று வரை ஒரு விசேட தன்மையும் காணப்படுகின்றது. உள்ளூர் பழமைவாதிகளும், சீர்திருத்தவாதிகளும் முரண்டுபட்டு நிற்பார்கள். ஆனால் அன்னிய தலையீடு, அன்னிய ஆதிக்கம், அன்னியக் கொள்கைகள்... என அன்னியரின் எந்த நடவடிக்கைகளும் தமது நாட்டில் உள்நுழைய முனைந்தால் உடனே ஒன்றிணைந்து கொள்வார்கள், அதனை எதிர்ப்பார்கள். இந்த வகையில் தான் 1979இல் பழமைவாதிகள், சீர்திருத்தவாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து “ஈரானின் சீர்திருத்தம்” எனும் பெயரில் மன்னராட்சியைக் கவிழ்த்ததுடன் அவர்கள் நின்று விடவில்லை,

பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டார்கள், செய்தித்தாள்கள் தடை செய்யப்பட்டன, பல பத்திரிகை நிறுவனங்கள் இழுத்து மூடப்பட்டதாக இன்றும் பரபரப்பாகப் பேசப்படும் விடயங்கள் அவை.

அதாவது மிகவும் கடுமையான மதப் போக்கை அவர்கள் கைக்கொண்டனர் என்பதனால் தான் அன்னிய தலையீடு இன்று வரை தலை தூக்கவில்லைப் போலும்.

1979 இன் முன்னரான சனாதிபதி ஷாமொஹமட் அமெரிக்கா சார்பான நடவடிக்கைகள் தனது நாட்டில் அமெரிக்கப் பொருளாதாரக் கொள்கைகள் என்பவற்றை கடைப்பிடிக்க முற்பட்டமை அமெரிக்காவுக்கு மிகவும் பிடித்தமான விடயங்கள்.

1979 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமெரிக்க சனாதிபதியாகவிருந்த ஜிம்மி கார்டர் இத்தகைய ஷாமொஹமட்டின் போக்கினை மிகவும் ஆதரித்தார். தட்டிக் கொடுத்தார் என்றே கூறமுடியும்.

ஆனால் 1979இல் ஷாமொஹமட்டின் கவிழ்ப்பின் பின்னர் தான் ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் பகை உருவாகத் தொடங்கியது.



அன்று தொடக்கம் இன்றுவரை ஈரானும் அமெரிக்காவும் எந்தவகையிலும் ஒத்துப் போவதாகத் தெரியவில்லை. அதேநேரம் இன்னொன்றையும் அவதானிக்க முடியும்.

ஈரானில் அன்றிலிருந்து இன்று வரை பல சனாதிபதிகள் வந்துள்ளனர். அதேபோல அமெரிக்காவிலும் ஜிம்மி கார்டரிலிருந்து இன்றுள்ள ஜோர்ஜ் புஷ் வரை சனாதிபதிகள் மாறி விட்டார்கள்.

ஆனால் ஒன்றேயொன்று மட்டுமே மாற்றம் அடையவில்லை எனலாம். அதாவது ஈரானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையேயுள்ள முரண்பாடுகள் தீரவில்லை, முரண்பாடுகள் உச்சம் அடையும்நிலை தோன்றிவிட்டது. எனவே ஜோர்ஜ் புஷ் கூறும் ஈரானின் சீர்திருத்தம் என்பது நினைத்த மாத்திரத்தில் ஏற்படுத்திவிடக் கூடியதல்ல.

சிலவேளைகளில் அமெரிக்காவிற்கு ஆதரவான போக்கும், அமெரிக்காவின் முடிவுகளை பாராட்சமின்றி முழுமனதாக ஏற்பதுமே அமெரிக்காவைப் பொறுத்தவரை ஈரானின் சீர்திருத்தம் என்பதனுள் அடங்குவதாக இருக்கலாம்.

அதேவேளை ஈராக் மீதான போரில் ஈரான் நடுநிலைமை தான் வகித்தது. எதிர்ப்புக் கூறிய வல்லரசு நாடுகளான ரஷ்யா, ஜேர்மனி தவிர ஏனைய நாடுகளின் மீதும் நடுவுநிலைமை வகித்த நாடுகளின் மீதுமே அமெரிக்காவின் கோபம் திரும்பியிருக்க முடியும்.

அந்த வகையில் தான் ஈரான், சிரியா போன்ற சிறிய நாடுகளை அமெரிக்கா தட்டிக் கேட்டு அதட்டி மிரட்டி வைக்க நினைக்கின்றது போலும்.

அதனால்தான் ஈரானில் பின்லேடனின் மகன் ஷாத் பின்லேடன் பதுங்கி வாழ்கின்றான். அவனுக்கு ஈரான் தஞ்சமளிக்கின்றது என்று அண்மையில் ஜோர்ஜ் புஷ் குற்றம் சாட்டியிருந்தார்.

அதுமட்டுமன்றி யுரேனியத்தை சீனாவிடமிருந்து ஈரான் பெற்றுக் கொள்கின்றது. தீவிரவாதத்தைப் பரப்புகின்றது என்று அமெரிக்கா ஈராக் போர்முடிந்த கையுடன் ஈரான் மீது குற்றச்சாட்டுக்களைத் தொடங்கியது.

“அடிக்கு மேல் அடியடித்தால் அம்மியும் நகரும்” என்பது போல் தொடர்ந்து ஈரான் மீதான குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா தாரக மந்திரமாய் கூறியதையடுத்து உலக நாடுகளிடையேயும் சில நகர்வுகள் தோன்ற ஆரம்பித்தன.

இதனையடுத்தே ஜேர்மனி, ரஷ்ய சனாதிபதிகள் ஈரான் தன்னிடம் அணுவாயுதம் இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்கள்.

ஐ.நா.சபையில் வீட்டோ (Veto) அதிகாரம் பெற்ற நாடுகள் வலியுறுத்தியுள்ளன என்பது ஈரானுக்கு சிக்கலை உருவாக்கியது. அதேவேளை அமெரிக்காவிற்கு மிகுந்த மகிழ்ச்சியளித்துள்ளது எனலாம்.

இது ஈரான் மீதான காய் நகர்த்தலுக்கு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்சிற்கு கிடைத்த வெற்றியே அன்றி வேறொன்றாக இருக்க முடியாது.

அதுமட்டுமன்றி இரகசிய அணுவாயுதங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதை நிரூபிக்க ஈரானுக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்துள்ளது. இந்த அவகாசம் நீடிக்கப்படமாட்டாது என ஐ.நா.சபையின் அணுவாயுத கண்காணிப்பு நிறுவனத்தின் தலைமையகம் எச்சரித்துள்ளது. அதுமட்டுமன்றி ஈரான் தன்னிடமுள்ள அணுவாயுத ஆலைகளின் விபரங்களை வெளியிட மறுப்பதாகவும் அது குற்றம் சாட்டியுள்ளது.

இதனையடுத்து தான் அணுசக்தித் திட்டத்தை மக்களின் நன்மைக்கு செயற்படுத்த ஐ.நா.சபை அனுமதிக்க வேண்டும். அனுமதி கொடுத்தால் யுரேனிய செறிவூட்டலை ஈரான் நிறுத்தக் கூடும் என அண்மையில் ஈரான் சனாதிபதி கதாமி பண்டமாற்று முறையில் கேட்டிருந்தார்.

ஆனால் தற்போது



கதாமி

சனாதிபதி கதாமியோ தமது அணுவாயுதத் திட்டங்கள் உள்ள பகுதிகளை சோதனையிட அனுமதியளித்துள்ளதோடு யுரேனிய உற்பத்திகளை கைவிடுவதாகவும் இறங்கி வந்துள்ளார்.

இந்த இணக்கமானது ஈராக்கின் நிலையை ஈரானுக்கு உருவாக்கிவிடினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஈராக்கும் ஆரம்பத்தில் தன்னிடம் அணுவாயுதம் இல்லை என்றுதான் உறுதியாக இருந்த போதும், உலக நாடுகளின் எச்சரிக்கை ஐ.நா.சபையின் கண்டனம் என்பன தான் அன்று அணுவாயுதப் பகுதிகளைச் சோதனையிட ஈராக்கை அனுமதிக்க வைத்தது. இன்றும் ஈராக்கின் அதேநிலைகள் நிர்ப்பந்தங்கள் தான் ஈரானையும் அணுவாயுதப் பகுதிகளை சோதனையிட இணங்க வைத்துள்ளது.

ஆரம்பத்தில் ஐ.நா.சபையின் அணுவாயுதப் பரிசோதகர்கள் தான் ஈராக்கினுள் இறங்கி பரிசோதனைகளைத் தொடர்ந்தார்கள்.

தான் நினைத்த இலக்குகளை அடைய அமெரிக்க சனாதிபதி புஷ்ஷும் பிரிட்டிஸ் பிரதமர் ரொனிப் பிளேயரும் தமது அணுவாயுத பரிசோதகர்களை ஈராக்கிற்கு அனுப்பினார்கள்.

தமது இஸ்ரம் போல் ஈராக்கில் அணுவாயுத உற்பத்தி நடைபெறுகின்றது என அறிக்கை தயாரித்தார்கள், ஐ.நா.சபையில் கொடுத்தார்கள். அந்நாட்டை சுக்குநூறாக்கினார்கள். கலாச்சாரத்தை சீரழித்தார்கள்.

இன்று ஈரானின் இணக்கத்தையடுத்து ஐ.நா.பரிசோதகர்கள் நாளை ஈரானுக்குள் செல்லலாம்... பரிசோதகர்களின் வேகம் போதாது. காலம் தாழ்த்த முடியாது என நாளை மறுநாள் அமெரிக்கப் பரிசோதகர்கள் ஈரானுக்குள் பிரவேசிக்கலாம்...?

ஈரானிடம் அணுவாயுத உலைகள் இருப்பதாக அறிக்கை தயாரிக்கப்படலாம்... ஈரான் அமெரிக்காவினால் தாக்கப்படலாம்...?

இதனால் தான் ஈரானின் இணக்கமானது அதனது அழிவிற்கே அடிகோலிடப் போகின்றதோ...எனும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

உலகின் நூறு கோடி முஸ்லிம்களை சில இலட்சமுள்ள யூதர்களே ஆட்டிப்படைப்பதாக மலேசியப் பிரதமர் மஹதீர் முஹம்மத் அண்மையில் குற்றம் சாட்டியுள்ளார். அதேவேளை சோசலிசம், கம்யூனிசம், மனித உரிமைகள், ஜனநாயகம் போன்ற தத்துவங்களை கண்டுபிடித்தவர்களும் யூதர்கள் தான். ஐரோப்பியர்கள் 120 இலட்சம் யூதர்களில் 60 இலட்சம் யூதர்களைக் கொன்றனர். எஞ்சியிருக்கும் யூதர்கள் தான் இலைமறைகாயாக உலகையாள்கின்றார்கள் என்றும் அவர் சாடியிருந்தார்.

உண்மைநிலை இதுவாகக் கூட இருக்கலாம்.. ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகள் அழிக்கப்பட்டுள்ளன. பலஸ்தீனம் மீது யூதர்கள் தான் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஈரான் தற்போது சிக்கலுக்குள் முகம் கொடுத்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளில் யூதர்களின் செல்வாக்குத் தான் அதிகமாக காணப்படுகின்றது. எனவே இலைமறைகாயாய் உலகை ஆள்பவர்கள் யூதர்கள் தான் என்றும் கூறமுடியும்.

தற்போது ஜோர்ஜ் புஷ் தனது அடுத்த வருடத் தேர்தலுக்காக தனது ஈரான் மீதான பார்வையை கொஞ்சம் தாமதப்படுத்தலாம்...? தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால் அடுத்த இலக்காக ஈரான், வடகொரியா, சிரியா போன்ற நாடுகள் மீது அவரது இலக்குத் திருப்பப்படலாம்.

மறுபுறம் ஜோர்ஜ் புஷ் தேர்தலில் கோட்டைவிட்டாலும் புதிதாக வருபவர்கள் மட்டும் இந்த நாடுகளை தாக்க முனையமாட்டார்கள் என்று நம்ப முடியாது.


ஏனெனில் 1979 இல் அமெரிக்க சனாதிபதி தொடக்கிவிட்ட ஈரான் மீதான முரண் பாடுகள் தான் இன்றுள்ள ஜோர்ஜ் புஷ்சினால் முன்னெடுக்கப்பட்டன. ஈரான் தாக்கப்படுமளவிற்குத் தள்ளப்பட்டுள்ளது.

எனவே ஈரானை, வடகொரியாவை, சிரியாவை காப்பாற்றக் கூடிய வகையில் அமெரிக்காவின் புதிய சனாதிபதிகள் இருக்கப் போவதில்லை.

அதேநேரம் ஈராக், மத்திய கிழக்கு, ஈரான் போன்ற நாடுகளில் அமெரிக்காவிற்கெதிரான உணர்வலைகள் பெருமளவில் கிளர்ந்தெழுகின்றன. இது பாகிஸ்தானிலும் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதாவது முஸ்லீம்கள் கிளர்ந்தெழ ஆரம்பித்துள்ளார்கள். அதனால் அமெரிக்கா தான் நினைத்தபடி நடந்திட முடியுமா... என்பது சந்தேகமே!

**இ. கலைவாணி**



# பாம்புக்கடி

**த**ற்போது பருவமழை ஆரம்பித்துள்ளது. இதுவரையில் கறையான் புற்றுகளிலும் மரப்பொந்துகளிலும் மற்றும் இடங்களிலும் வாழ்ந்துவந்த விசயந்துக்கள் மெல்ல வெளியேறி பொதுமக்கள் நடமாடுகின்ற இடங்களில் காணப்படலாம். பாம்புக்கடிக்கு உட்படும் மக்களின் எண்ணிக்கை பொதுவாக பருவமழைக் காலங்களில் அதிகம்.

இலங்கையில் ஏறத்தாள 93 வகையான கடல், தரைப்பாம்புகள் இனம்காணப்பட்டுள்ளன. இவற்றில் 5 வகையான பாம்புகளே அதிக நச்சுத்தன்மையானவை, உயிரிழப்பை ஏற்படுத்துபவை. வருடா வருடம் அண்ணளவாக 65,000 பேர் பாம்புக்கடிக்கு உட்படுகின்றனர். இதில் ஏறத்தாள 500 பேர் வரையில் மரணத்தை தழுவுகின்றனர்.

**பொதுவான நச்சுப்பாம்புகள்**

1) நாகபாம்பு (**Cobra**)
2) எட்டடிவிரியன் அல்லது விரியன்(**Common Karit**)
3) வீணை பனையன் (**Ceylon Krait**)
4) கண்ணாடி விரியன்(**Russell's Viper**)
6) சுருட்டைப் பாம்பு/பல்சுருட்டை (**Saw Sealed Viper**)

**பாம்புக்கடியின் பொதுவான அறிகுறிகள்**

1) கடித்த இடத்தில் அல்லது வேறு பகுதிகளில் இரத்தப் பெருக்கு
2) கடித்த இடத்தில் வீக்கம் நோவு
3) தலையிடி நெஞ்சு நோ

இவற்றிற்கு மேலதிகமாக பாம்பு வகைகளின் தன்மைக்கு ஏற்ப அறிகுறிகள் மாறுபடலாம்.

**புடையன்பாம்புக்கடியின் அறிகுறிகள்-**

இதன் விடம் குருதிச்சுற்றோட்டத் தொகுதியைப் பாதிக்கும்போது குருதி உறைதல் பொறிமுறையை பாதிக்கச்செய்யும்.
1) குருதியுறைதல் தாமதிப்பதால் இரத்தப்பெருக்கு ஏற்படும்.
2) உடலின் மென்மையான பகுதிகளினூடு இரத்தக்கசிவு
3) இரத்த வாந்தி, மலத்தினூடு இரத்தம் வெளியேறல்.
4) மூளையின் உற்புறமாக ஏற்படும் இரத்தப்பெருக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் அபாயத்தையும் கொண்டிருக்கும்.

**நாகபாம்புக்கடியின் அறிகுறிகள்-**

இதன் விடம் நரம்புத் தொகுதியைப் பாதிக்கச் செய்யும்.
1) கண்ணிமை மூடியிருத்தல் அதாவது கண்ணை திறப்பது கடினம்.

**பாம்புக்கடிக்கு உட்பட்டவருக்கு செய்ய வேண்டியது-**

1) அவருக்கு எந்த உயிராபத்தும் ஏற் படாது என்று உள வியல் ரீதியாக திடப்படுத்துவது அதாவது பயத்தை இல்லாமல் செய்வது.
2) காயப்பட்ட பகுதியை அசையாமல் வைத்திருப்பதன் மூலம் நஞ்சு நோவையும் குறைப்பது.
3) கடித்த பகுதியை நீரால் கழுவி அல்லது துடைத்து விடுவது.
4) உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டுவருவது.
5) இயலுமானவரை கடித்த பாம்பை இனம் காண்பதற்கு ஏதுவாக பாம்பை அடித்து கொண்டு வருவது.
6) கடிக்கப்பட்ட அவயவங்களில் உள்ள ஆபரணங்களை வீக்கம் ஏற்படுவதற்கு முன்பாக அகற்றுவது.



**பாம்புக்கடிக்கு உட்பட்டவருக்கு செய்யக்கூடாதது-**

1) அவருக்கு அருகில் உள்ளவர்கள் பதக்களித்து நோயாளியை பயப்பீதிக்கு உட்படுத்துவது.
2) கடித்த பகுதியில் வாயை வைத்து உறுஞ்சுவது
3) கடித்த பகுதியை வெட்டித் திறப்பது.
4) பார்வை பார்த்தல், விசகடி வைத்தியரிடம் கொண்டு செல்லுவது. விசக்கல்லு வைப்பது இவற்றின் மூலம் தகுந்த மருத்துவ சிகிச்சையைத் தாமதிக்கச் செய்வது.
5) கடித்த பகுதிக்கு மேலாக இறுக்கமாகக் கட்டுப்போடுவது.

தற்போது பொதுமக்கள் மத்தியில் விசக்கடி சம்பந்தமாக போதிய விழிப்புணர்வு உள்ள போதிலும் இன்றும் பழமையான மருத்துவ முறைகளை நாடுவதால் அநாவசியமான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

பாம்புக்கடிக்கு உட்பட்ட வரை இயலுமான வரை விரைவாக வைத்தியசாலையில் அனுமதிப்பதன் மூலம் இவற்றால் ஏற்படுகின்ற உயிரிழப்புகளையும் உடல் உறுப்பு பாதிப்புகளையும் தவிர்க்கலாம்.

கடந்த ஒருவாரமாக வன்னிப் பகுதிகளில் பாம்புக்கடிக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இவற்றை தவிர்ப்பதற்கு பொதுமக்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு அவசியம்.

பாம்புக்கடியை தவிர்ப்பதற்கு செய்ய வேண்டியவை:-
1) இருக்கின்ற சுற்றாடலை தூய்மையாக வைத்திருத்தல்
2) பாம்புகள் குடிகொள்ளக்கூடிய இடங்களை அழித்தல்
3) இரவு வேளைகளில் ஒளிவிளக்குகளுடன் நடமாடுதல்
4) வீடுகளில் பொருட்கள், உபகரணங்களை எடுக்கும் போது நிதானத்துடன் எடுத்தல்.
5) சிறு பிள்ளைகள் விளையாடும், செல்லும் இடங்களை தூய்மையாக வைத்திருத்தல்.
6)இயலுமானவரை நச்சுப்பாம்புகளை அழித்தல்.

எம் மக்கள் மத்தியில் இருக்கின்ற சில மூட நம்பிக்கைகளால் சில வகைப்பாம்புகள் அழிக்கப்படாது விடப்படுகின்றன. யுத்த நடவடிக்கைகளினால் மண்ணில் புதையுண்டு போயுள்ள வெடிப்பொருட்களிற்கு மேலதிகமாக தற்போதைய காலநிலையும் உயிராபத்தை விளைவிக்கும் விசகடிகளை உருவாக்கலாம் அவதானமாக எமது காரியங்களை செய்து அநாவசிய உயிராபத்துகளைத் தவிர்ப்போம்.

*வைத்தியக்கலாநிதி*
*பா. யூடிரமேஸ் ஜெயக்குமார்.*

# மாதிரி முன்பள்ளி சிறுவர் பூங்கா மடு கல்விவலயத்தில் திறந்துவைப்பு

(அலுவலக செய்தியாளர்)

மடு கல்வி வலயத்தில் மாதிரி முன்பள்ளியும் சிறுவர் பூங்காவும் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டன.

கடந்த 19ஆம் திகதியன்று வட்டக்கண்டல் காத்தாங்குளம் பகுதியில் புனித சூசையப்பர் மாதிரி முன்பள்ளியும், சிறுவர்பூங்காவும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பெற்றன .

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் இணைந்து யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் மடு கல்வி வலயத்தில் மேற்படி மாதிரி முன்பள்ளியும் சிறுவர் பூங்காவும் ஆரம்பித்து வைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)





# கண்டி கல்வித் திணைக்கள நிதி மோசடி இரு ஆசிரிய ஆலோசகர்களும் கைது!

கண்டி கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ரூ.10 கோடி ஊழல் மோசடி தொடர்பில் மேலும் இரு ஆசிரிய ஆலோசகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி கல்வித் திணைக்களத்தில் கடந்த 10 வருடங்களாக இடம்பெற்றதாகக் கூறப்படும் ரூபாய் 10 கோடி ஊழல் மோசடி வழக்கு விசாரணை கண்டி மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதவான் டி.எல். செனவிரட்ண முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

இவ்வழக்கில் சந்தேக நபர்களான ஆறு பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒரு சந்தேக நபர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மேலும் இரு ஆசிரிய ஆலோசகர்கள் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதவான் இச்சந்தேக நபர்களை எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதோடு வழக்கையும் அன்றைய தினத்திற்கு ஒத்திவைத்தார்.

## விவாதிக்க முடிவு

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய இந்திய விஜயம் குறித்து விவாதம் நடத்தச் சிறிலங்கா அரசு அனுமதியளித்துள்ளது.இரு நாடுகளுக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் தொடர்பாகப் பாராளுமன்றத்துக்கு விளக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

# ஐ. நா.வில் ரணில் ஆற்றிய உரை சிறிலங்காவிற்கு இராஜதந்திரப் பின்னடைவு

**ஜே.வி.பி. பா. உ. அஞ்ஞா உம்மா**

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரையில் நாட்டிற்கு இராஜதந்திர ரீதியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருப்பதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் அஞ்ஞா உம்மா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழனன்று பாராளுமன்ற ஒத்திவைப்பு தீர்மானத்தின் போது அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார். பிரதமரின் ஐக்கிய நாடுகள் சபை உரை வன்மையாகக் கண்டிக்க வேண்டியதொன்றாகும் என்று கூறினார்.

இவ்விவாதத்தில் உரையாற்றிய பொ.ஐ.மு.பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உலகிலிருந்து சிறிலங்காப் பிரதமர் ஆற்றிய உரையின் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது என்று கூறினார். பிரதமரின் உரை சிறிலங்காவில் வாழும் முஸ்லிம்களின் மனதைப் பெரிதும் புண்படுத்தியுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எம். எல். எம். ஹிஸ்புல்லா கூறினார்.

# முனைப்பகுதிச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதம்

## - தமிழ்க் காங்கிரஸ் அனுப்பியது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை முனைப் பகுதியில் கடற்படை மற்றும் பொது மக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் நிலையைத் தொடர்ந்து அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

கடற்படையினரின் பாஸ் நடைமுறை மற்றும் சோதனைக் கெடுபிடிகளே மேற்படி மோதலுக்குக் காரணம் எனவும் அதனை உடனடியாக நீக்கி சுதந்திரமான முறையில் மீன்பிடிப்பதற்கு அப்பகுதி மீனவர்களை அனுமதிக்குமாறு வலியுறுத்தி இக்கடிதம் அனுப்பட்டுள்ளதாக தமிழ் காங்கிரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (33)

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எண்ணெய் ஆய்வுக்கு வருகை

(கொழும்பு)

சிறிலங்காவின் எண்ணெய் ஆய்வுக்காக பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் டிசம்பர் மாதம் கொழும்பு வரவுள்ளனர்.

அமைச்சர் கருஜெயசூரிய இது குறித்துத் தெரிவித்துள்ளார். இதற்கென அழைக்கப்பட்டிருக்கும் முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கொன்று அரசினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

நாட்டின் மேற்குக் கரையில் எண்ணெய் வளம் இருப்பதற்கான வாய்ப்புக்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ரெலவ்சனை விலக்கும் சனாதிபதியின் கோரிக்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவமதிக்கும் செயல்!

## தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கண்டனம்

**"கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரிக்வே ரெலவ்சனைப் பதவி விலகுமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேப் பிரதமரிடம் கோரியுள்ளமை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவமதிக்கும் செயலாகும். சனாதிபதி இவ்விடயத்தில் தன்னிச்சையாக முடிவு எடுத்தமை தவறானதாகும்" என தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.**

கண்காணிப்புக் குழுத்தலைவரின் நியமனம் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் கையொப்பமிட்டுள்ளனர்.

எனவே, இவ்விடயத்தில் சனாதிபதி தன்னிச்சையான முடிவு எடுத்துள்ளமை பொருத்தமற்ற செயற்பாடாகும் என தமிழர் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி கூறுகையில், சனாதிபதியின் இத்தகைய நடவடிக்கை பாரதூரமான நிலையினையே ஏற்படுத்தும் என்றும், சனாதிபதியே நோர்வேயை சமாதான முயற்சியின் அனுசரணையாளராக அழைத்து வந்துவிட்டு, இப்போது விலகச் சொல்வது அநாவசியமான தலையீடும் கோரிக்கையும் ஆகும் என்றார்.

அதேபோல் மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும், எம்.பி.யுமான மனோ கணேசன் கருத்துக் கூறுகையில்,

புலிகள் இடைக்கால நிர்வாக சபை திட்டவரைவை சமர்ப்பிக்கவுள்ள வேளையில் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தவே சனாதிபதி இவ்வாறு கோரியுள்ளார். பாராளுமன்றில் ஆட்சி மாற்றம் கொண்டு வரவுமே அவர் முயற்சிக்கின்றார் என்று கூறியுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துக் கூறுகையில், சனாதிபதியின் இத்தகைய செயற்பாடுசமாதான முயற்சியைக் குழப்பும் நடவடிக்கையாகும் என்று கூறியுள்ளார்.

## தீர்மானம்

(முல்லைத்தீவு)

யூனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் முல்லை. மாவட்டத்தில் 10 சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. நவம்பர் மாதத்திற்குள் இப்பணியை முடிப்பதற்காக தற்போது வேலைகள் நடைபெற்று வருவதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் து. லி. ஜெயக்குலராஜா தெரிவித்தார். (20)

## திருமலையில் நெருப்பாற்று நீச்சலிற்...



## பொ. ஐ. மு. ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

எமது தலைமைத்துவத்தை விமர்சித்தும் கட்சியின் கொள்கையை மீறியும் நடந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திரசிகாமணிக்கு எதிராகக் கட்சி ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். அத்துடன் எமது கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான புத்திரசிகாமணி எமது கட்சியின் கொள்கையை மீறிச் செயற்பட்டது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற அமர்வின்போது புத்திரசிகாமணி எம்.பி. பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆர்ப்பாட்டப் பேரணியை விமர்சித்துப் பேசிவிட்டு தமிழ்க் கட்சியின் பக்கம் சென்று அமர்ந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# படையினர் நெருக்கடிகள் தொடர்வதால் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்பு!

## தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அவலம்

(யாழ்ப்பாணம்)

தம் பாடசாலையை இயங்குவதற்கு அனுமதித்தபோது கையளிப்பு நிகழ்வில் படையினர் கூறிய வாக்குறுதிகளை நடைமுறைப் படுத்த படையினர் தவறியுள்ளமையால் தம் கல்விக்கு நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாக தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கல்விச் சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

மேற்படி பாடசாலையை நீண்டகாலம் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த படையினர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் தொடர்ந்து தமது மேற்பார்வையின் கீழ் பாடசாலையை இயங்குவதற்கு அனுமதித்ததுடன், படிப்படியாக படையினரின் மேற்பார்வைகள் மற்றும் அதனால் சூழவுள்ள பாதுகாப்பு நிலைகள் என்பன அகற்றப்படுமென உறுதியளித்திருந்தனர். ஆனால், இவ்வாறு கூறி ஒன்றரை வருடங்களாகியும் இதனை நிறைவேற்ற படையினர் தவறியமையால் தமது கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறியவர்கள் இதனை நெறிப்படுத்துவதற்கு படையினர் தொடர்ந்து பின்னடித்து வந்தால் தமது இயல்பான கல்வியைக் கோரி போராட்டம் நடத்துவதைவிட தமக்கு வேறுவழி இல்லையென மேலும் கூறியுள்ளனர். (33)

# தீபாவளியன்று கசிப்பு வேட்டை; மல்லாவியில் பலர் சிக்கினர்!

(மல்லாவி)

மல்லாவி பிரதேசத்தில் துணுக்காய் காவல்துறையினரால் நேற்று முன்தினம் கசிப்பு வேட்டை நடத்தப்பட்டது.

மல்லாவி பாலிநகர் பகுதியில் காலை முதல் மாலை வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் சில நபர்கள் இது தொடர்பாக கைது செய்யப்பட்டனர். அத்தோடு கசிப்பும் அதற்குரிய உபகரணங்களும் மீட்கப்பட்டன.

கசிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட 150 லீற்றர் கோடா. கொள்கலன்கள் என்பனவற்றுடன் கசிப்பும் காவல்துறையால் மீட்கபட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மல்லாவி தமிழீழ மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (24)

## சந்திப்பு

யுத்தத்தால் அழிந்து போன தென்னைகளுக்கு இழப்பீடு பெறுவது தொடர்பாக கலந்துரையாட வடமாகாண தெங்கு பயிர்ச் செய்கையாளர் சங்கம் சிறிலங்காவின் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியல்லவை சந்திக்கவுள்ளது.

## மட்டக்களப்பில் கடும் வரட்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாண்டு பருவமழை பெய்யவில்லை. இதனால் அங்கு கடும் வரட்சி நிலவுகின்றது.

31 அடி உயர நவகிரிகுளத்தில் 10 அடி 8 அங்குலமும், 28 அடி உயர உன்னிச்சைக்குளத்தில் 9 அடி 6 அங்குலமும், 15 அடி 8 அங்குல உயர உறுகாமம் குளத்தில் 4 அடி 9 அங்குலமும் 19 அடி 2 அங்குல உயர வாகனேரிக் குளத்தில் 8 அடி 3 அங்குலமுமே தற்போது நீர்மட்டம் உள்ளது.

இதனால் உன்னிச்சை, வாகனேரி, துன்பங்கேணி, கடுக்காமுனை ஆகிய பகுதி மக்கள் குடிநீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

பெரும் போக நெற் செய்கை தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால் விதைப்பு வேலைகளை முடிப்பதிலும், பயிர் காப்புறுதி செய்வதிலும் விவசாயிகள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

கிளி/தொழில்நுட்பக் கல்லூரியின்
தேசிய சான்றிதழ்களுக்கான
ஆங்கிலக்கற்கை நெறி (என். சி. இ. )க்கு
பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான

**விண்ணப்பம் கோரல்**

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரிக்கு தேசிய சான்றிதழ்களுக்கான ஆங்கிலக்கற்கை நெறியினை போதிப்பதற்கு விரிவுரையாளர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

**கல்வித் தகைமை:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் / நிறுவனத்தில் பெறப்பட்ட ஆங்கில டிப்ளோமா சான்றிதழ் அல்லது பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்.
- கற்பித்தலில் 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 31-10-2003ற்கு முன்னர், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி, யாழ். சாலை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி,
கிளிநொச்சி.

(சி-8709)

## 8ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 20 • 04 • 1967



வீரச்சாவு 26 • 10 • 1995

**லெப். நீலவர்ணன்**
(ஐயம்பிள்ளை மனோகரன்)

தாயக மீட்பில் உன்னைப் பிரிந்து
எட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன
ஆனாலும் உன் நினைவுகள்
எம்மை விட்டு பிரியப்போவதில்லை

இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்

ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

(3117)

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.



### சிந்தனைக்கு

ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்வதில் மக்கள் தொடர்பு சாதனங்கள் வகிக்கும் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 26-10-2003

## மேலும் பொறுத்திருக்க வேண்டும்

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது செல்வாக்கை வெளிப்படுத்த 10 இலட்சம் பேரை சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் திரட்ட எடுத்த முயற்சி தோல்வி கண்டுள்ளது. தென்பகுதி முழுவதிலும் இருந்து தமது ஆதரவாளர்களைக் கொண்டுவந்து கொழும்பில் குவித்து தமது செல்வாக்கை ஐக்கிய தேசிய முன்னணிக்கு மட்டுமல்லாது ஜே.வி.பி.க்கும், சர்வதேசத்திற்கும் காட்ட எடுத்த முயற்சி இதுவென விமர்சகர்கள் பலர் தெரிவித்திருந்தனர்.

"பொறுத்தது போதும்" என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட இந்தப் பேரணியின் நோக்கம் அரசாங்கத்தை ஆட்டம்காணச் செய்த ஆட்சிக்கவிழ்ப்பிற்கு தமது பக்கத்திற்கு பலம் சேர்ப்பது என்பதாகவிருந்தது. பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி அதிகாரத்தை இழந்து இரண்டு வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கையில், இப்பேரணியின் போது திரளும் மக்கள் வெள்ளத்தைக் காட்டி நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆட்சியைக் களைத்துவிட சிறிலங்கா சுதந்திரக்கட்சி எண்ணியது.

ஆனால், பத்து இலட்சம் என்ற அவர்களின் குறிக்கோளின் 10 வீதமளவிலேயே அவர்களால் எட்டமுடிந்தமை இப்பேரணி முயற்சி தோல்வியை தழுவிக்கொணடமையையே வெளிப்படுத்தியது..

மூன்றாவது சக்தியாக ஜே.வி.பி. தென்முனையில் திசமாரகமவிலிருந்தும் மத்திய பகுதியில் கண்டியிலிருந்தும் நடத்திய பாதை யாத்திரைகளுக்குக் கிடைத்த வெற்றி இரண்டாவது சக்தியாகிய சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மக்கள் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டிய தேவையை உருவாக்கியது. அத்துடன் ஜே.வி.பி.க்கு கிடைத்த அவ்வெற்றியானது சு.க.விற்கு பத்து இலட்சம் பேரை கொழும்பில் திரட்டிவிட முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கக்கூடும். இவ்வாறான இந்த நம்பிக்கையை சிதறடிக்கப்பட்டதானது சு.க.விற்கு சில பின்னடைவுகளை ஏற்படுத்தப் போவது நிச்சயம்.

அதாவது ஆட்சிக்கவிழ்ப்பிற்கு உடனடியாக அவசரப்படமுடியாத நிலையை இது உருவாக்கியுள்ளது. சு.க.விற்கு மக்கள் ஆதரவில்லையென ஆளுங்கட்சி மேற்கொள்ளப்போகும் பிரச்சாரம் ஆளுங்கட்சிக்கு வலுச்சேர்ப்பதாக இருக்கும்.

அத்துடன் ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்வதன் மூலமே ஐக்கிய தேசிய முன்னணியை தேர்தலில் வெற்றிகொள்ள முடியும் என வாதிடும் அநுரா அணியினருக்கு இது பலம் அளிப்பதாகவிருக்கும். ஆனால் ஜே.வி.பி.யுடனான பேரம் பேசும் வலு பாதிக்கப்பட்டிருப்பதும் வெளிப்படை. ஏற்கனவே அநுரா பண்டாரநாயக்க கூட்டுக்காக தமது பரம்பரைத் தொகுதியாகிய அத்தன கலவை விட்டுக்கொடுக்கவும் தயாராக இருந்தார். எனவே மேலும் பல விட்டுக்கொடுப்புக்களைச் செய்வதன் மூலமே கூட்டை ஏற்படுத்த முடியும்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவு வெளியிடப்பட்டதும் அதற்கு எதிரான போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்துவதற்கான திட்டத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி கொண்டிருக்கின்றது. நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட போராட்டம் இதற்கு ஆரம்பமாகவே ஒழுங்கு செய்யப்பட்டது.

திட்டமிட்டபடி போராட்டங்கள் பிரதேச ரீதியாக நடத்தப்படுமாயின் டிசம்பர் மாதம் நடுப்பகுதி வரை இப்போராட்டங்கள் தொடரவிருக்கின்றன. இவற்றை அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்கள் என்ற போர்வையில் நடத்தவே சிறிலங்கா சுதந்திரக்கட்சி திட்டமிட்டுள்ளது. இப்போராட்டங் களின் போது இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுவதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் பேச்சுவார்த்தைகள் நகர்வுகளுக்கு எதிரான பிரச்சாரங்களே முன்வைக்கப்படவுள்ளன. நேற்று முன்தினம் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு கொழும்பில் கிடைத்த தோல்வியானது இனவாதப் பிரச்சாரத்தை மேலும் விரிவாக மேற்கொள்வதற்கான தூண்டுதலையே வழங்கியிருக்கின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேரணி குறித்து ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் அலட்டிக்கொள்ளாதது போல் காட்டிக்கொண்டாலும் அது உண்மையில் அச்சமுற்ற நிலையிலேயே இருந்தது. போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கும், கண்காணிப்புக் குழுவிற்கும், இடைக்கால நிர்வாகத்திற்கும் எதிரான எதிர்க்கட்சியினர் இனவாத அமைப்புக்கள், பௌத்த பிக்குகள் நடத்திய ஆர்ப்பாட்டங்களில் திரண்ட கணிசமான மக்கள் தொகை அதனை அச்சமடையவே வைத்திருந்தது. இப்போதைக்கு ஆளுங்கட்சி மனஅமைதி கொள்ள முடியினும் தொடரும் இனவாதப் பிரச்சாரங்களுக்கு அதனால் ஈடுகொடுக்க முடிவதிலிருந்தே சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும்.

# நோர்வேயின் நோக்கம் புரியாது அரசு உள்ளது எமது கொள்கையே நாட்டைக் கட்டியெழுப்பும்

## ஜே.வி.பி.பொதுச்செயலர் கூறுகின்றார்

(கொழும்பு)

நோர்வேயின் உள்நோக்கம் தெரியாமல் அரசு கனவு காண்கின்றது. வடக்கு-கிழக்கை புலிகளுக்குப் பெற்றுக்கொடுத்து விட்டு கடற்பரப்பை தமதாக்குவதே நோர்வேயின் உள் நோக்கமாகும். எமது கொள்கைதான் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப உதவும.

இவ்வாறு ஜே.வி.பி. பொதுச் செயலாளர் டில்வின் சில்வா விஹாரமஹாதேவி அரங்கில் பேசுகையில் கடந்த புதன் கிழமை கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

அரசாங்கத்தை விரட்டிவிட்டுப் புதிய அரசை எவ்வகையில் அமைக்க வேண்டும் என்பதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும். நாடு பொருளாதார ரீதியாகவும் சீர்குலைந்தே காணப்படுகின்றது. இதைச் சீரமைத்து நாட்டைக் கட்டியெழுப்ப திராணியில்லா இலங்கை அரசினர் இலங்கை மக்களுக்கு ஏற்றவாறில்லாமல் வெளிநாட்டு சமூகத்திற்கு ஏற்ற வாறுதான் ஆட்சி செய்கின்றனர். அமெரிக்க சனாதிபதி புஷ்ஷின் வசனங்களும் பிரதமரின் குரலும் சங்கமித்துக் காணப்படுகின்றன. நாடு தேசியப் பிரச்சினையால் இரண்டு துண்டுகளாகப் பிரியும் அபாயமுள்ளது. இதை நாம் தடுக்க வேண்டும். திறந்த பொருளாதாரத்தின் மூலம் நாட்டின் வளங்கள் அனைத்தும் வெளிநாட்டவரால் சுரண்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

விமானப்படை என்று பெயர் தான். ஒரு விமானமும் எம்மிடம் இல்லை. இருக்கின்ற இரண்டு உலங்கு வானூர்திகளும் புலிகள் சவாரி செய்யவே பயன்படுகின்றன. வன்னிக் காட்டுக்குள் ஒளிந்துகிடந்த புலிகளை இன்று சர்வதேச நாடுகளுக்கு பயணம் செய்யும் ராஜதந்திரிகளாக்கியது யார்?

மீண்டும் இலங்கையைக் கட்டியெழுப்புவோம் என்ற திட்டத்தின் கீழ் நாட்டை மீண்டும் புதைக்க முயற்சிக்கின்றனர். கட்டியெழுப்பிப் பாருங்கள் என்ன நடக்கின்றது என்று புலிகள் ஆட்பலத்தில் பெருகிவிட்டார்கள் என்று, பாதுகாப்பு அமைச்சரே ஒத்துக்கொண்டு விட்டார்.

இந்த லட்சணத்தில் நாட்டின் ஐக்கியத்தை கட்டியெழுப்பப் போகின்றார்களாம் நோர்வேத்தரகர்களை வைத்துக்கொண்டு நாட்டைக் கட்டியெழுப்ப எப்படி முடியும்?

அதிகாரப் பகிர்வு மூலம் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று பலரும் சொல்கின்றனர்.

ஆனால் எங்களது கொள்கை இதற்கு முற்றிலும் மாறானது. தமிழர்கள் அதிகாரப்பகிர்வை கேட்டால் அவர்களை அழைத்து எதற்காக உங்களுக்கு அதிகாரப்பகிர்வு என்று கேட்போம்.

அந்நேரம் அவர்கள் சொல்லும்பிரச்சினைகளை ஒவ்வொன்றாகக் குறிப்பெடுத்து அவற்றிற்குரிய தீர்வுகளை நாங்கள் முன்வைப்போம். அவர்கள் திருப்திப்படும் அளவுக்குப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டறிந்து பிரச்சினைக்கு முடிவு கட்டுவோம்.

அதன் பின்னர் இன்னும் அதிகாரப் பகிர்வு வேண்டுமா? என்று கேட்போம். பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிட்டதே எல்லாம் சமத்துவமாக நடக்கின்றது என்று அவர்களையே சொல்ல வைப்போம். நாட்டை அழிக்கும் அரசை வீட்டிற்கு அனுப்பும் வரை போராடுவோம் என்று சூழுரைத்துள்ளார்.

# தப்பியோடிய விமானப்படை சிப்பாயிடமிருந்து துப்பாக்கி, வெடிபொருட்கள் பல மீட்பு!

சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமானதெனக் கருதப்படும் துப்பாக்கி ஒன்றும் 7கைக்குண்டுகளும் மேலும் வெடிபொருட்கள், சயனைட் என்பவற்றைச் சட்டவிரோதமாகத் தமது கட்டுப்பாட்டிற்ல் வைத்திருந்ததற்காக விமானப்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைத்திருக்குமாறு அனுராதபுர மாஜிஸ்ரேட் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர் அனுராதபுரம் பிள்ளையார் சந்தி, கட்டகடுவ வீதியில் வசிக்கும் தப்பியோடிய விமானப்படை வீரரான திலக் செனவிரத்ன என்பவராவார்.

இதுதொடர்பாக கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்குக் கிடைக்கப்பெற்ற அநாமதேய புகாரையடுத்து நடத்திய சோதனையின் போது இவ்வாறு வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதன்போது துப்பாக்கி 01, 84-5வகை கைக்குண்டு இரண்டு, M-75வகை குண்டு ஒன்று டிட்டனேட்டர், T56ரக ரவைகள் 13,9மி.மி.கைத்துப்பாக்கிக்கான ரவைகள் வெடி மருந்து நிரப்பிய பி.வி.சி.குழாய் (குண்டு) சயனைட் நான்கு கிராம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இவை பாதாள உலகக்குழுவினரின்பயன்பாட்டுக்கு தயார் செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

# பொலிஸ்மா அதிபர் வெற்றிடத்தை நிரப்ப அரசியல் யாப்பு சபைக்கு சிபார்சு

(கொழும்பு)

வெற்றிடமாகவுள்ள பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஒருவரை நியமிக்கும் பொருட்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழு தனது சிபார்சை அரசியல் யாப்பு சபையிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த சிபார்சு அரசியல் யாப்புச் சபைக்கு நேற்றுமுன் தினம் சமர்ப்பிக்கப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக் குழுத் தலைவரும் சனாதிபதியின் சட்டத்தரணியுமான ரஞ்சித் அபேசூரிய தெரிவித்தார்.

இந்த சிபார்சை அரசியல் யாப்புச்சபை பரிசீலித்த பின்னர் புதிய பொலிஸ்மா அதிபர் யார் என்பது தீர்மானிக்கப்படவுள்ளது.

பொலிஸ்மா அதிபர் ஆனந்த ராஜா கடந்த 13ஆம் திகதி ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து அப்பதவி வெற்றிடமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க.வின் பிரச்சாரம் இன்று முடிவடைகிறது!


சமாதான மற்றும் அபிவிருத்தி தொடர்பாக ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பிரச்சார நடவடிக்கை இன்று முடிவடைகிறது. ஐ.தே.க.பேச்சாளர் ஜயந்த கரணாதிலக இதுகுறித்துக் கூறுகையில், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 350 வாக்களிப்புப் பிரிவுகளில் இப்பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

# உலகக்கிண்ணக் கால்பந்துப் போட்டிக்கான முன்னோடி தகுதிகாண் போட்டியில் சிறிலங்கா

2006ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண இறுதிச்சுற்று காஸ்பந்து போட்டிகளுக்கான ஆசிய வலய முன்னோடி தகுதிகாண் போட்டியில் சிறிலங்கா பங்குபெற்றவுள்ளது.

இந்த முன்னோடி தகுதிகாண் போட்டிகளில் பங்குபற்றும் 14 நாடுகளில் வெற்றிபெறும் ஏழு நாடுகள் ஆசிய காஸ்பந்தாட்டப் போட்டி சம்மேளனத் தரப்படுத்தலில் முதல் 25 நாடுகளுடன் இணைத்துக்கொண்டு மற்றுமோர் தகுதிகாண் சுற்றில் விளையாடும் என அறிவிக்கப்படுகிறது.

முன்னோடி தகுதிகாண் போட்டி ஒன்றில் லாவோஸ் அணியை சிறிலங்கா எதிர்த்தாடவுள்ளது. இப்போட்டிக்கான திகதி இன்னமும் அறிவிக்கப்படவில்லை.




# அவுஸ்திரேலியா — இந்தியா குவாலியூரில் இன்று சந்திப்பு

இந்தியா-நியூசிலாந்து அவுஸ்திரேலியா அணிகள் பங்குகொள்ளும் மும்முனை ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் 2வது ஒருநாள் போட்டியில் இன்று அவுஸ்திரேலிய-இந்திய அணிகள் குவாலியூரில் மோதுகின்றன.

இவ்வருட ஆரம்பத்தில் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்குப் பின் இவ்விரு அணிகளும் சந்திப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தொடரில் முதலாவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து இந்திய அணிகள் சென்னையில் விளையாடின. இப்போட்டி மழைகாரணமாக நிறுத்தப்பட்டபோது முதலில் ஆடிய இந்திய அணி 26.5 ஓவர்களில் 3விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது. டெண்டுல்கர் 48 ஓட்டத்துடனும் யுவராஜ்சிங் 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்த வேளை மழை குறுக்கிட்டமை குறிப்பிடத்தக்கது.

# மீனவர் மீதான கெடுபிடிகள் நீக்கப்படாவிடில் குடாநாடு தழுவிய வெகுசனப் போராட்டம்!

## வடமராட்சி வடக்கு க.தொ.கூ. சமாசம்

யாழ்.குடாநாட்டில் மீனவர்கள் மீதான இராணுவ கெடுபிடிகள் நீக்கப்படாவிட்டால் குடாநாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டப்பேரணி மற்றும் மறியல் போராட்ட முடிவினில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினருக்கும் மீனவர்களுக்கும் இடையிலான முறுகல் நிலைக்குக்காரணமான பாஸ் நடைமுறையை இரத்துச் செய்தல் ,வேண்டுமென அங்கு பலராலும் கோரிக்கை விடப்பட்டது.

இதனிடையே பருத்தித்துறை முனைப்பிரதேசத்தில் ஆண், பெண் வேறுபாடின்றி பொதுமக்கள் தாக்கப்பட்டமை ,

இத்தாக்குதல் சம்பவங்களைத் தாம் மேற்கொண்டதாக ஏற்றுக்கொள்ள படைத்தரப்பு மறுத்துவருகின்றமை,

பல லட்சம் ரூபா பெறுமதியான படகுகள்,கட்டுமரம் வெட்டிவிடப்பட்டமை மற்றும் தாக்கி மூழ்கடிக்கப்பட்டமை,

கடல் 'வான்' தோண்டுவதற்கு பலாலிபடைத்தலைமை அனுமதித்துள்ள போதிலும், அப்பணிகளைமுன்னெடுக்க மீனவர்களுக்கு அனுமதிமறுக்கப்படுகின்றமை,

அவ்வாறு கடல்'வான்'களை ஆழப்படுத்துவதிலும் தமது இராணுவ நலன்களை முன்னெடுக்க படையினர் முற்படுகின்றமை,

கடற்றொழில் சமூகத்திற்கு நடக்கின்ற துன்ப துயரங்களை உடனுக்குடன் வெளிப்படுத்தி குரல்கொடுக்கும் ஊடகவியலாளர்களைத் தாக்கி அவர்களது தொழிற்கருவிகளை அழித்து உடைப்பது தொடர்பாகவும் அங்குகடும் ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன.

மிகவும் சுமுகமான முறையில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் எதிர்ப்புப் பேரணியின் போதுபடையினருக்கெதிரான பல கோசங்கள் ஆக்ரோசமாக எழுப்பப்பட்டன. (27)

# மக்களைச் சீண்டும் ராணுவத்தினரின் செயற்பாடு தொடர்பாக புதிய நடவடிக்கை தேவை

## தமிழ் பா. உ. கள் கண்காணிப்புக் குழுவிடம் வலியுறுத்து

மக்களைச் சீண்டும் வகையில் இராணுவத்தினரின் செயற்பாடுகள் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்கு மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுகளை வழங்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் தியாகலிங்கம் ஆகியோர் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவிடம் அறிவித்துள்ளனர்.

அண்மையில் பருத்தித்துறை பகுதியில் நடைபெற்ற மீனவர்கள் மீதான படையினரின் தாக்குதல்களைத் தொடர்ந்து அப்பகுதியில் ஏற்பட்டபதற்ற சூழ்நிலை தொடர்பாக நேற்று போர்நிறுத்தக கண்காணிப்புக்குழுவின பிரதிநிதிகளைச் சந்தித்தபோது இதனை அவர்கள்வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் தொடர்ந்து விளக்குகையில், மக்களுக்கு ராணுவத்தினர் மேற்கொள்ளும் அடாவடித்தனங்கள் தொடர்பாகக் கண்காணிப்புக் குழு தற்போது நேரடியாக அவ் இராணுவத்தினரின் கெடுபிடிகளை கண்காணித்துவருகிறது. எனவே இது தொடர்பாக உரியநடவடிக்கைகள் எடுத்து மக்கள் எதிர்பார்க்கும் தீர்வுகளை அவர்களுக்கு விட்டுக் கொடுப்பதுடன் இப்படியான படையினரின் நடவடிக்கைகளை இனிமேலும் தொடராமல் இருப்பதற்கு உறுதிகளை வழங்க வேண்டுமென கண்காணிப்புக் குழுவினரைக் கேட்டுள்ளனர்.

இதற்கு போர்நிறுத்த கண்காணிப்புக்குழு கருத்து தெரிவிக்கையில் அரசிற்கும் புலிகளுக்குமிடையிலான கண்காணிப்பு அதிகாரங்களை, மட்டுமே தாங்கள் கொண்டுள்ளதாகவும், இதன்போது புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொள்ளலாம் எனவும் மக்களுக்கும், படையினருக்குமிடையிலான பிரச்சினைகளைத் தீர்க்கும் அதிகாரங்கள் தமக்கு இல்லாதபோதிலும் இப்படியான படைத்தரப்பின் செயற்பாடுகளைத் தாம் ஒரு படைத்தரப்பு சார்பான ஒப்பந்த மீறலாக கருதுவதால் இது தொடர்பாக எமது தலைமைக்காரியாலயத்திற்கு இது சம்பந்தமான முறைப்பாடுகளைத் தாம் அனுப்பிவைப்போம் என உறுதியளித்துள்ளார். (33)

### ஹக்கீம் குழுவினர் பிரிட்டன் பயணம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் அரசியல் அமைப்பு ஆலோசனைக் குழுவினர் நேற்று பிரித்தானியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

நவம்பர் மாதம் முதலாம் திகதி வரை பிரித்தானியாவில் தங்கியிருக்கும் இக்குழுவினர் பல நகரங்களுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(32)

# சட்டவிரோத ஆயுதங்களில் 70 வீதம் அரசிடமிருந்தே திருடப்பட்டவை

சட்டவிரோத ஆயுதங்கள் குறித்த பிரச்சினை தொடர்பாக செவ்வியளிக்க பொலிஸ் படையின் உயர் அதிகாரிகள் எவரும் முன்வரவில்லை. போர்ப் பகுதிக்கு வெளியே பயன்பாட்டிலுள்ள சட்ட விரோத ஆயுதங்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமானவை அரசின் கையிருப்பில் இருந்தே திருடப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுவதால் இது ஓர் பெரிய அரசியல் விவகாரமாகவே இருக்கின்றது இவ் ஆய்வுகளில் பெரும்பாலானவை அரசியல் வாதிகளிடமிருந்தே பெறப்பட்டமை தெரியவருகிறது. தமக்கெனபிரத்தியேக படை போல ஒரு மெய்ப்பாதுகாப்புப் பிரிவை உருவாக்கி அதற்கென ஆயுதங்களைப் பெறும் இவர்கள் தாம் அதிகாரத்திலிருந்தும் விலகும் போது அவற்றை திருப்பிக்கொடுப்பதில்லை.

இதனிடையே யுத்தம் நடைபெறாத தென்னிலங்கை பகுதிகளில் மட்டும் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஆயுதங்கள் இருப்பதாக மதிப்பீடுகள் கூறுகின்றன.ஆனால் அரசு 30 ஆயிரம் ஆயுதங்கள் தான் இருப்பதாக உத்தியோக பூர்வமாக அறிவித்ததாக பி.பி.ஸி. கூறுகிறது.

# யாழ். தேசிய எழுச்சிப் பேரவை இன்று பல்கலையில் கூடுகிறது

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையில் இரண்டாவது சங்கம நிகழ்வு இன்று காலை 9.00மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்டத் தலைவர் சிறில தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பொது அமைப்புக்கள் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர்கள் புலிகளின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற அரசியல் மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பாக விரிவான ஆராய்வுகள் மேற் கொள்ளப்படுவதுடன் இராணுவத்தினரால் மக்களுக்கு ஏற்படுகின்ற நெருக்குவாரங்கள் தொடர்பாகவும் அதற்குரிய பிரச்சினைகள் தொடர்பான தீர்வுகளையும் எடுக்கும் விதத்தில் ஆய்வுகளும் முன்மொழிவுகளும் முக்கிய தீர்மானங்களும் இந்நிகழ்வில் எடுக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (33)

# -பனை தென்னைவள அ.நி- பேரிணையத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு மலர் நேற்று வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாணபனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தால் 30ஆவது ஆண்டுநிறைவு மலர் வெளியிடப்பட்டுள்ளது.



பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கடந்த ஆண்டு கால வரலாற்றில் அதன் வளர்ச்சிப்பணிகள், ஏற்பட்டபின்னடைவுகள், பனை தென்னைஉற்பத்தி வீழ்ச்சிக்குரிய காரணங்கள், அதனைக்கட்டிஎழுப்புவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் போன்றபல்வேறு விடயங்களைத் தாங்கி வெளியிடப்பட்ட இந்நூல் வெளியீட்டுவிழாவில் தேசியக் கொடிஏற்றலுடன் ஆரம்பமானது.

ஆசிஉரையை துணை அரசியல்பொறுப்பாளர் சோ.தங்கன், முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தி.சபாரட்ணம் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் சிறப்புரையை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர். வெ. இளங்குமரன், விடுதலைப்புலிகளின் முக்கியஉறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினர், மதிப்பீட்டுரையை எழுத்தாளர் நிலாந்தன் நிகழ்த்தினர்.

அடுத்து நூலின் முதல்பிரதியை வடகிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான இ.இளங்கோவன் வெளியிட்டு வைக்க, தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையத்தால் பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவு சங்கங்களிற்கான இருநாள் கருத்தமர்வின் முதல்நாள் கருத்தமர்வு நேற்று முதல் காலை 10 மணி தொடக்கம், மாலை3.00 மணிவரை இதே பாடசாலையில் நடைபெற்றுள்ளது. (லோ)

### புலிகள்...

அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களுடன் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தலைமையிலான தூதுக்குழு கலந்துரையாட இருப்பதாக அமைச்சின் ஊடகச் செயலாளர் எஸ்.விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மலையக மக்களுக்கும் இடமளிக்கவேண்டும் என்று கோரிவந்தமைக்கு காரணம் தேசிய இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வுத் திட்டம் வரும்போது அதில் மலையக மக்களின் பிரச்சினைகளும் உள்ளடக்கப்பட்டு ஒரேயடியாக சகல பிரச்சினைகளும் தீர்த்து விடவேண்டும் . என்பது தான். அவ்வாறான தீர்வில் சமூகங்களுக்கிடையில பரஸ்பர உணர்வுகள் சீரான முறையில் பேண உதவியாக இருக்கும் வடகிழக்கில்வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் மலையகத்தில் பல்வேறு பகுதிகளில் செறிந்து வாழும் மக்களின் பிரச்சினைகளும் வித்தியாசமானவை. மலையக மக்கள் பெரும்பான்மை மக்களுடன் புவியியல் ரீதியாக இணைந்து வாழவேண்டிய சூழ்நிலையில் உள்ளனர். ஆனால் தேசிய நீரோட்டத்தில் இணைந்துள்ள ஒர இனம் என்ற வகையில் இரண்டு தரப்பினரும் சில முக்கியமான பிரச்சினைகளில் இணைந்து செயற்படுவது . இன்றியமையாதது. ஆனால் தமிழ் மக்களின் பொதுவான பிரச்சினைகளில் இணைந்தும் பிரதேச ரீதியாக பிரச்சினைகளில் தனித்து செயற்பட வேண்டியது அவசியமானதாகும்.

வன்னியில் இன்று நடைபெறவிருக்கும் கலந்துரையாடல் மேற்குறிப்பிட்ட விடயங்களில் பல தெளிவுகளை ஏற்படுத்தும் என்பதும் மலையக மக்களின் அரசியல் அதிகாரம் பற்றி சரியான திசையில் செல்வதற்கான சில கொள்கைகளுக்கு இடமளிக்கும் என்பது எமது நம்பிக்கை என்று அமைச்சர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.(லோ)

### மீனவர்கள்...

அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகள் மற்றும் மீனவ சங்கங்களின் சமாச பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர். மீனவர்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களில் யாழ். அரச அதிபருக்கான மகஜரை வடமராட்சி வடக்கு மீனவசங்கங்களின் சமாச செயலாளர் க.சூரியகுமாரன், பருத்தித்துறைப பிரதேச செயலாளர் செ.சிவசாமியிடம் கையளித்தார்.

போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளுக்கான மகஜரை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் சி.கஜேந்திரனும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மகஜர்களை வடமராட்சி வெகுசன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் விம்சன் டிபோல் மற்றும் முனைமீனவ சங்கத் தலைவர் வ. அருள்தாஸ் ஆகியோர் கையளித்தனர். இதனிடையே அங்கு வருகை தந்திருந்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஜோசெப்பிடம் அவரது அமைச்சுக்கான மகஜரை வல் வெட்டித்துறை மீனவ சங்கத் தலைவர் சி.தனபாலசிங்கம் கையளித்திருந்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தின் சார்பில் உல்வ் (U.L.F) மற்றும் மெக்மர் (Imgmar) ஆகியோர் சம்பவ இடத்திற்குப் பிரசன்னமாகியிருந்தனர்.

அதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.கே. சிவாஜிலிங்கம், மாவை சேனாதிராஜா, வடமராட்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தைச்சேர்ந்த வின்சன் டிபோல், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக் களத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ஏ. ஜோசெப் மற்றும் கடற்றொழில் பரிசோதகர் கே.தர்மலிங்கம் ஆகியோர் அங்கு உரையாற்றினர். (27)

### கண்காணிப்புக்...

விளைவாக நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாகவும் அங்கு ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.இவ் ஊரடங்குச் சட்டம் நேற்றுக்காலை நீக்கப்பட்டபோதிலும் பொலிசாரும், இராணுவத்தினரும் அங்கு தீவிர பாதுகாப்பு நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பாலம்...

மக்கள் போக்குவரத்துக்களை மேற்கொள்ளலாம் என வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் அறிவித்துள்ளனர்.

மக்களின் நலன் கருதி சேதமடைந்திருந்த இப்பாலத்தை வீதி அபிவிருத்திஅதிகார சபை மிகத் துரித கதியில் திருத்தப் பணிகளை நிறைவு செய்துள்ளதால் இன்றுமுதல் தமது வழமையான போக்குவரவுகளை இப் பாதையூடாக மக்கள் மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளனர். (லோ)

### ரெலவிசன்...

கிறது. இந்த நிலையில் சிறிலங்கா கடற்படை படகுகள் விடுதலைப் புலிகளின் தற்கொலை படகுத் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்றும் அரசாங்க ஊடகப் பிரிவு அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரை நீக்குமாறு நோர்வேப் பிரதமரை சனாதிபதி கேட்டிருந்த போதிலும் இது தொடர்பாக அவர் அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தவில்லை எனவும் அச் செயலகம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.